# உடுதும்பர பிரதேச சபை

## கண்டி மாவட்டம்

-----------------------------------

1. நிதிக் கூற்றுக்கள்

----------------------------

1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

---------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2014 ஏப்ரல் 16 திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2013 மே 23 திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 ஜனவரி 16 திகதி சபையின் தலைவருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

1.2 அபிப்பிராயம்

------------------

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள முக்கிய விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர, நிதிக் கூற்றுக்களின் 2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு உடுதும்பர பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றின் நிதிச் செயற்பாடுகள் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமை ஒன்றினை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

---------------------------------------------------------

1.3.1 கணக்கீட்டு கொள்கைகள்

-------------------------------------

வர்த்தக அனுமதிப் பத்திர கட்டணங்கள், வாடகை மற்றும் முச்சக்கர வண்டி கட்டணம் என்பன காசு அடிப்படையில் கணக்கு வைக்கப்பட்டிருந்தன.

1.3.2 கணக்கீட்டு குறைபாடுகள்

------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) பிரதேச சபை பெறுமதி கூட்டிய வரிக்காக பதிவு செய்திருக்கவில்லை எனினும் சுற்றாடல் அனுமதிப்பத்திர கட்டணங்கள் அறவீடு செய்யும் போது, பெறுமதி கூட்டியவரி என ரூபா 106,281 தொகையொன்று அறவிடப்பட்டிருந்தது.

(ஆ) களஞ்சிய முற்பண கணக்கீட்டு முறையினை கடைபிடிக்காமல் மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்திருந்த ரூபா 28,500 தொகை பெறுமதியான நீர் குழாய் துணைக் கருவிகள் மற்றும் ரூபா 252,194 பெறுமதியான காகிதங்களுக்காக மொத்த செலவினையும் மீளாய்வாண்டிற்கான செலவுகள் என கணக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(இ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 313,000 இற்கான வாடகை ஆதனங்களின் மூலம் முற்பெறுவனவு வருமான ரூபா 276,000 தொகை என கணக்கீடு செய்யப்பட்டிருந்த காரணத்தினால், ரூபா 37,000 குறைவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஈ) ஓய்வூதியத் திணைக்களத்தினால் சபைக்கு சமர்ப்பத்திருந்த பிலபத்திரத்தின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான நிலுவை ஓய்வூதியம் ரூபா 599,677 தொகை என அறிவித்திருந்த போதும் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ஐந்தொகையின் அந் நிலுவை ரூபா 589,488 தொகை என ரூபா 10,189 தொகை குறைவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(உ) பிரதேச சபைக்கு உரித்தாக்கப்படாதிருந்த ரூபா 2,051,250 இற்கான 04 வாகனங்களின் பெறுமதி மிளாய்வாண்டிற்கான வாகனங்கள் மற்றும் மாட்டு வண்டிக் கணக்குகளில் காட்டப்பட்டிருந்தன.

1.3.3 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டு கணக்குகள்

---------------------------------------------------------------------------

04 கணக்கு விடயங்கள் கட்டுப்பாட்டு கணக்குகளின் பிரகாரம் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 1,692,402 தொகையாக காணப்பட்டதுடன் குறிப்பிட்ட பதிவேடுகள் மற்றும் பட்டோலைகளின் பிரகாரம் அந்த கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 1,709,038 என காணப்பட்டமையால், ரூபா 16,636 முரண் ஒன்று அவதானிக்கப்பட்டது.

1.3.4 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

----------------------------------------------------------------------------------

(அ) பெறவேண்டிய கணக்குகள்

----------------------------------------

2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்தம் ரூபா 16,552,056 இற்கான தொகை பெற வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 3,492,754 தொகை ஒன்று 01 வருட காலத்தை மிகைத்திருந்த மீதியொன்றாகும்.

(ஆ) செலுத்த வேண்டிய கணக்குகள்

------------------------------------------------

2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்தம் ரூபா 14,122,158 இற்கான செலுத்த வேண்டிய மீதிகளின் பெறுமதயில் ரூபா 1,855,614 தொகையொன்று 01 வருட காலத்தை மிகைத்திருந்த மீதியொன்றாகும்.

1.3.5 சட்டங்கள் விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணக்கமின்மைகள்

----------------------------------------------------------------------------------------------------

பின்வரு சட்டங்கள் விதிகள் பிரமாணய்களுடன் இணக்கமின்மை சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள் பிரமாணங்களுடன் தொடர்பு | இணக்கமின்மைகள் |
|---|---|
| (அ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டம் | |

| | | |
|---|---|---|
| (i) | பிரிவு 158 | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு முன்னைய ஆண்டுகள் தொடர்பாக நிலுவையாக காணப்பட்ட வீதவரி, ஏக்கர்வரி மற்றும் நீர் கட்டணங்களின் கூட்டுத்தொகை ரூபா 1,363,001 இற்கான நிலுவை மீதி ஒன்று காணப்பட்டதுடன், பணம் செலுத்த தவறுவோர் தொடர்பாக குறிப்பிட்ட பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| (ii) | பிரிவு 159 | கடைவாடகை ரூபா 498,630 இற்கான நிலுவை மீதி ஒன்று காணிப்பட்ட போதும், அந்த பணம் செலுத்தத் தவறியோர் தொடர்பாக குறிப்பிட்ட பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| (ஆ) | இலங்கை குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின் நி.பி. 571 | 2009 முதல் 2012 ஆண்டுகள் தொடர்பாக ரூபா 77,586 இற்கான வைப்புக்களை தீர்ப்பதற்கு அல்லது பொருத்தமான நடவடிக்கை எடுப்பதற்கு செயற்பட்டிருக்கவில்லை. |

2 நிதி மீளாய்வு

--------------------

2.1 நிதி விளைவுகள்

-------------------------

சமர்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2013 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 1,230,230 ஆக காணப்பட்டதுடன் அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் போது மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 177,932 ஆக காணப்பட்டமையால், நிதி விளைவுகளில் ரூபா 1,052,298 இற்கான முன்னேற்றமொன்று காணப்பட்டது.

2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

---------------------------------------------------

கூட்டுத்தொகை 9,316,099 இற்கான தொகையொன்று மீளாய்வாண்டிற்காக சம்பளங்கள் படிகள் ஆக சபை கொடுப்பனவு மேற்கொண்டிருந்த போதும் அவற்றில் மீளளிப்பு செய்திருந்த தொகை ரூபா 9,042,615 தொகை எனினும் மீதி ரூபா 273,484 ற்கான நிலுவை சம்பளம் தொகையினை கிடைக்க வேண்டிய ஒரு தொகை என கணக்குகளில் காட்டுவதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

2.3 தொழிற்படு மூலதன முகாமைத்துவம்

--------------------------------------------------------

மொத்த நடைமுறை சொத்துக்களுடன் நடைமுறை பொறுப்புக்களின் விகிதாசாரம் 1.18:1 ஆக காணப்பட்டதுடன், முன்னைய ஆண்டின்போது அவை 1.02:1 ஆக காணப்பட்டது இதன் பிரகாரம், இந்த விகிதாசாரங்கள் உச்ச மட்டத்தில் காணப்படவில்லை என அவதானிக்கப்பட்டது.

2.4 வருமான நிருவாகம்

----------------------------

2.4.1 வருமானம் சோகரித்தலின் செயலற்றுகை

------------------------------------------------------------

மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

--------------------------------------------------------------------------------------------------------------------

தலைவரினால் மீளாய்வாண்டிற்காக சமர்ப்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம் ,உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம் பற்றிய தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | வருமான விடயம் | மதிப்பீட்டு | உள்ளவாறான | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 |
| (i) | வீதவரி | 163 | 96 | 328 |
| (ii) | வாடகை | 1,377 | 1,290 | 503 |
| (iii) | அனுமதிப் பத்திர கட்டணம் | 825 | 816 | - |
| (iv) | ஏனைய வருமானங்கள் | 3,880 | 4,831 | 3,507 |

2.4.2 வீதவரி

----------

மீளாய்வாண்டு ஆரம்ப திகதியில் உள்ளவாறு ரூபா 117,679 இற்கான நிலுவை யொன்று காணப்பட்டதுடன், ஆண்டிற்கான பில்போடப்பட்டவை ரூபா 77,618 ஆகும் ஆண்டின் போது அறவீடுகளின் சதவீதம் நிலுவையில் நூற்றிற்கு 84 வும் பில்போடப்பட்டவைகளில் நூற்றுக்கு 30.2 ஆக காணப்பட்டதுடன் மீளாவாண்டு இறுதியில் உள்ளவாறு ரூபா 149,736 தொகை யொன்று அறவிட வேண்டியிருந்தது.

2.4.3 வர்த்தக அனுமதிப்பத்திர கட்டணம்

----------------------------------------------------

காசு அடிப்படையில் கணக்குகள் பதியப்பட்டமையால், வருட ஆரம்பத்தில் அல்லது இறுதியில் நிலுவை தொகைகள் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை

2.4.4 நிர்க் கட்டணம்

---------------------

மீளாய்வாண்டின் ஆரம்ப திகதியில் உள்ளவாறு ரூபா 673,897 இற்கான நிலுவை ஒன்று காணப்பட்டதுடன், ஆண்டின் போது பில்போடப்பட்டவைகள் ரூபா 718,827 ஆகும். ஆண்டின் போது அறவீடு செய்தவைகள் முறையே 187,692 மற்றும் ரூபா 70,410 ஆக காணப்பட்டதுடன், அவை நூற்றுவீதப்படி முறையே 27.8 வும் மற்றும் நூற்றுற்கு 23.7 வும் ஆகும். மீளாய்வாண்டு இறுதித் திகதியில் உள்ளவாறு ரூபா 1,034,622 இற்கான தொகை யொன்று அறவிடவேண்டியிருந்ததுடன், இந்த மீதியில் 2014 திசெம்பர் 31 திகதியின் போதும் ரூபா 544,352 இற்கான தொகையொன்று மேலும் அறவிடப்பட வேண்டியிருந்தது.

2.4.5 ஏக்கர் வரி

---------------

மீளாய்வாண்டு ஆரம்பத்தில் உள்ளவாறு நிலுவை ரூபா 168,600 ஆகக் காணப்பட்டதுடன் ஆண்டின் போது பில்போடப்பட்டவைகள் ரூபா 12,252 ஆகும். அவ்வருமானங்களில் ஆண்டின் போது அறவீடு செய்தல் முறையே ரூபா 557 வும் மற்றும் 1,.556 வும் ஆகும். எனவே, வரி அறவீடு செய்தல் மிகவும் பலவீன நிலைவையில் காணப்பட்டது என அவதானிக்கப்பட்டது.

3 செயற்பாட்டு மீளாய்வு

-------------------------------

3.1 முகாமைத்துவ திறமையின்மை

---------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன

(அ) பிணை முறிகள் பெற்றுக்கொள்ளாமல் மோற்கொள்ளப்பட்ட வழங்கள் சேவைகள் தொடர்பாக தொடர்தும் அறவிடப்படாமல் காணப்படும் கடன் ரூபா 89,000 இனை அறவீடு செய்வதற்காக நடவடிக்கைகள் எடுத்திருக்க வில்லை

(ஆ) வர்த்தக நோக்குடன் கொள்வனவு செய்யப்பட்டு சேவையில் ஈடுபட்டிருந்த டுப்லோ அச்சு இயந்திரம் மற்றும் டிப்பர் வண்டி (CPLH- 4778) ஆகியவை தொடர்பாக வருடாந்த இலாப நட்டக் கணக்கொன்று மற்றும் திரண்ட கிரய நலன்களை காட்டக் கூடிய கூற்றொன்று தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை

(இ) 05 தொடர்பாடல் கம்பனிகளால் 03மற்றும் 05 வருட காலத்திற்கு முன்னர் அங்கீகாரம் இன்றி நிர்மானிக்கப்பட்டிருந்த 09 தொலைபேசி செலுத்துகை டவர்கள் 15 செலுத்துகை வசதிகள் வழங்கியிருந்ததுடன் அங்கீகாரம் மற்ற நிர்மான வேலைகள் தொடர்பாக 2013 நவம்பர் 21 திகதி வரை இது தொடர்பாக முறையான நடவடிக்கை ஒன்று கடைபடித்திருக்கவில்லை.

(ஈ) 2012 மற்றும் 2013 வருடாந்த பொருட்கணிப்பீட்டின் மூலம் இனங்காணப்பட்டிருந்த பெறுமதி குறிப்பிடப்படாத தளபாடங்கள் மற்றும் பொருத்துகள் மற்றும் இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் 78 விடயங்கள் தொடர்பாக 674 அலகுகள் மற்றும் ரூபா 39,965 பொறுமதியான 356 நூலகப்புத்தகங்களில் குறைவு ஒன்று தொடர்பாக பொறுப்பு வாய்ந்த அலுவலர்களிடம் அறவீடு செய்வதற்கு அல்லது முறையான நடவடிக்கை ஒன்று கடைபிடிப்பதற்கு செயற்பட்டிருக்கவில்லை.

3.2 செயற்பாட்டு திறமையின்மை

----------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டு தொடர்பாக வர்த்தக அனுமதிப்பத்திர கட்டணங்கள், வாடகை மற்றும், முச்சக்கர வண்டி கட்டணங்கள் பில் போடப்பட்டவை தொடர்பாக பூர்வாங்க கணிப்பீடு மேற் கொள்ளப்பட்டு அறிக்கைகள் பெற்றிருக்கவில்லை.

(ஆ) சபைக்கு சொந்தமான 03 நீர் செயற்திட்டங்களின் மூலம் நீர் வழங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்த 387 இடங்களில் 170 இடங்களில் நீர் மானிகள் பொருத்தப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக சபையின் நீர் முகாமைத்தவம் மற்றும் வருமானம் உழைத்தலில் பலவீன மட்டம் ஒன்று காணப்பட்டது.

(இ) 06 தொடர்பாடல் கம்பனிகளின் 06 இடங்களில் பொருத்தப்பட்டிருந்த பொருத்துகை டவர்களுக்காக 2011 முதல் 2013 வரை காலப்பகுதிக்காக ரூபா 30,000 இற்கான வர்த்தக வரி அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஈ) ரூபா 2,051,250 பெறுமதியான 04 வாகனங்கள் மற்றும் பெறுமதி குறிப்பிடப்படாத வாகனம் உட்பட 05 வாகனங்களை சபைக்கு உரித்தாக்கியிருக்கவில்லை.

(உ) 2012 மார்ச் 29 திகதி உள்ளூராட்சி திணைக்களத்தில் இருந்து கிடைத்திருந்த இலக்கம் T-39305-11-TTI கொண்ட பெறுமதி குறிப்பிடப்படாத நீர் பவுசர் 2014 செப்டம்பர் 18 திகதி வரை பதிவு செய்வதற்கான நடவடிக்கைகள் எடுத்திருக்கவில்லை.

(ஊ) சபையில் காணப்பட்ட 18 வாகனங்களுக்காக வருடாந்த வருமான அனுமதிப்பத்திரம் பெற்றிருக்கவில்லை.

3.3 பயன்படுத்தப்படாத மற்றும் குறை பயன்பாட்டு சொத்துக்கள்

-------------------------------------------------------------------------------------------

ஒரு வருடம் அல்லது அதற்கு மேற்பட்ட காலம் முதல் பெறுமதியினை மதிப்பிட முடியாத வாகனம் ஒன்று மற்றும் ரூபா 4.808,495 பெறுமதியான 10 வாகனங்கள் பயன்படுத்தப்படாமல் காணப்பட்டன எனவும் ரூபா 297,000 பெறுமதியான 02 வாகனங்கள் குறை பயன்பாட்டுடன் காணப்பட்டன எனவும் அவதானிக்கப்பட்டது.

3.4 ஒப்பந்த நிர்வாகம்

---------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) கிரிபட்டிய கிராம அலுவலரின் பகுதியில் கொஸ்வத்த பாதையில் 1.2:4(3/4'') கலவையில் 4'' கனத்தில் பாதையின் மேற்பகுதியில் கொங்கிரீட் பண்ணுதல் மேற்கொள்ளப்பட வேண்டும். எனினும், அது தொடர்பாக 6 சந்தர்ப்பங்களில் மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரிசோதனையின் போது பாதையின் கனம் 3 1/2, 3 ¼ மற்றும் 3'' அளவுகளில் நிர்மாணிக்கப்பட்டிருந்தது என வெளிப்படுத்தப்பட்டது. இதன் பிரகாரம் பாதையின் நிர்மாண வேலை மதிப்பீட்டிலுள்ள நியமங்களுக்கு இணங்கியிருக்கவில்லை.

(ஆ) பம்பரந்த பாதையில் இருந்து பனியமலே வரை செல்லும் பாதை அபிவிருத்தி செய்யும் மதிப்பீட்டில் 02 ஆம் இலக்க வேலை விடயத்தின் பிரகாரம் 1:2:4 (3/4'') கலவையில் 5'' கனத்திற்கு பாதையின் மேற்பகுதியில் கொங்கிரீட் போடப்பட வேண்டும் எனினும் பௌதீக பரிசோதனையின் போது அதன் கனம் 3 1/2'' மற்றும் 4 1/4'' ஆக காணப்பட்டது. இதன் பிரகாரம், பாதை மதிப்பீட்டிலுள்ள நியமங்களுக்கு இணங்க தீர்மானிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) வேவல முதல் பாஸல வரையின் பாதை அபிவிருத்தி செய்யும் மதிப்பீட்டில் வேலை விடய இலக்கம் 02 தொடர்பாக 1:2:4(3/4'') கலவையில் பாதை 5'' கனத்தில் கொங்கிரீட் பண்ணல் மேற் கொள்ளப்பட வேண்டும். எனினும், இது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரிசோதனையின் போது அதன் கனம் 3 ½'' மற்றும் 3'' என வெளிப்படுத்தப்பட்டது. இதன் பிரகாரம், மதிப்பீட்டிலுள்ள நியமங்களுக்கு இணக்க பாதை நிர்மானிக்கப்பட்டிருக்கவில்லை.

3.5 செயற்திட்டங்கள் தாமதம் செய்தல்

---

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மெதிவக்க, பல்லேவெல நீர் செயற்திட்டம் 2008 ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்ட 2011 ஆண்டு வரை நிர்மாண வேலைகள் மேற்கொள்ளப்பட்டு, அக்கால வீச்சில் ரூபா 1,618,000 தொகையொன்று செலவிடப்பட்டு அச்செயற்திட்டத்தின் வேலையை பூர்த்தி செய்வதற்காக மேலும் ரூபா 4,000,000 இனை மிகைத்த தொகை ஒன்று தேவையென சுட்டிக்காட்டி செயற்திட்டத்தின் வேலை இடைநிறுத்தப்பட்டிருந்தது. தற்போது அவற்றின் பொருத்துக்கள் துருப்பிடித்த நிலையில் ஏற்பட்டுள்ளது.

(ஆ) ரூபா 5,201,067 தொகையொன்று செலவிடப்பட்டு 2011 ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்டிருந்த மடுள்ள பொது சன நீர்த் திட்டம் 2014 ஜுன் 30 திகதி வரை செயற்படுத்துவதற்கு அல்லது நலன்களை பொது மக்களுக்கு வழங்குவதற்கும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

3.6 பதவியணி முகாமைத்துவம்

---

சபையில் அங்கிகரிக்கப்பட்ட பதவியணி பதவிகள் 59 காணப்பட்டதுடன் அவற்றில் 28 இற்கான வெற்றிடங்கள் காணப்பட்டன. அவ் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கைகள் எடுக்காமல் அமைய அடிப்படையில் 13 ஊழியர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர்.

4 கணக்கு நடவடிக்கை தன்மையும் நல்லாட்சியும்

---

4.1 கூட்டிணைப்புத் திட்டம்

---

மீளாய்வாண்டிற்காக கூட்டிணைப்புத் திட்டமொன்று தயாரித்திருக்கவில்லை.

4.2 கொள்வனவுத் திட்டம்

---

மீளாய்வாண்டிற்காக ரூபா 11,826,925 இற்கான மூலதன செலவு ஒன்று மேற் கொள்ளப்பட்டிருந்த போதும் அதற்காக கொள்வனவுத் திட்டமொன்று தயாரித்திருக்கவில்லை.

4.3 தொழிற்பாட்டுத் திட்டம்

---

மீளாய்வாண்டின் போது தொழிற்பாட்டுத் திட்டமொன்று தயாரித்திருக்கவில்லை.

4.4 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

---

சபையில் மீளாய்வாணடின் போது கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு அங்கத்தவர்களை நியமனம் செய்வதற்கு மற்றும் கூட்டங்கள் நடத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

4.5 அகக் கணக்காய்வு

----------------------------

மீளாய்வாண்டின் போது சபையில் போதியளவு அகக் கணக்காய்வு ஒன்று மேற் கொள்ளப்பட்டிருக்கவில்லை.

5 முறைகள் மற்றும் கட்டுபாடுகள்

---------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு பகுதிகள் தொடர்பாக விஷேட கவனம் தேவைப்படுகிறது.

(அ) கணக்கீடு

(ஆ) அகக் கட்டுப்பாடு

(இ) வருமான நிருவாகம்

(ஈ) சொத்துக்கள் முகாமைத்துவம்

(உ) கடன் கொடுத்தோர், கடன் பட்டோர் கட்டுப்பாடு

(ஊ) தொக்கு கட்டுப்பாடு

(எ) ஒப்பந்த நிருவாகம்